ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி, பரங்கிமலை கண்டோன்மெண்ட் 1,2,3,4 ஆகிய வட்டங்களில் தோழமைக் கட்சி நிர்வாகிகள், தோழர்களுடன் ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் தா.மோ.அன்பரசன் வீதி வீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். அருகில் நகரச் செயலாளர் டி.பாபு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், வட்டச் செயலாளர்கள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

இராதாபுரம் தொகுதியில் மு. அப்பாவு வாக்குச் சேகரிப்பு!

நெல்லை, ஏப்.13- நெல்லை மாவட்டம் இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட் பாளரும் சட்டப்பேரவை தலைவரு மான மு.அப்பாவு அவர்கள் இராதாபுரம் தொகுதிக்கு உட்பட்ட பல் வேறு கிராமங்களுக்கு தெரு தெருவாக வாக்காளர்களை சந்தித்து கழக அரசின் சாத னைகளை எடுத்துக் கூறி உத யசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகி றார்.அப்போது பெண்கள் ஆரத்தி எடுத்தும் மலர் தூவி யும் வரவேற்பு அளித்தனர்.

அதன்படி நேற்று முன் தினம் இராதாபுரம் தொகு திக்கு உட்பட்ட குண்டல், கூடுதாழை, கூட்டப் பனை,உவரி,நவ்வலடி, ஆவு டையார்புரம், முதுமொத் தான்மொழி, கூத்தங்குழி, விஜயாபதி,இடிந்தகரை உள் ளிட்ட கடற்கரை கிராமப் பகுதிகளில் உதய சூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிக்கும் பணியில் ஈடு பட்டார்.

இந்த நிகழ்வில் இராதாபு ரம் கிழக்கு ஒன்றிய செயலா ளர் தொகுதி பார்வையாளர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ்,

மேற்கு ஒன்றிய செயலா ளர் ஜோசப்பெல்சி,வள்ளி யூர் வடக்கு ஒன்றிய பொறுப் பாளர்,அலெக்ஸ் அப்பாவு, ஒன்றிய பொறுப்பாளர் எரிக் ஜூடு, ம.தி.மு.க.மாவட்ட செயலாளர் உவரி ரை மண்ட், தே.மு.தி.க. மாவட்ட செயலாளர் விஜி வேலாயுதம், வி.சி.க. மாவட்ட செயலாளர் அருள் செல்வன்,மக்கள் நீதி மையம் மாவட்ட செயலாளர் மைக் கேல் பால்வண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள்,கழக தொண்டர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். இராதாபுரம் கழக வெற்றி வேட்பாளர் பேரவை தலை வர் மு.அப்பாவு அவர்கள் வாக்கு சேகரிக்க சென்ற கிராமங்களில் எல்லாம் பெண்கள் ஆரத்தி எடுத்தும் மலர் தூவியும் உற்சாகமான வரவேற்பு அளித்தனர்.

சென்னை கிழக்கு மாவட்டம் சட்டமன்ற தொகுதியில் சர்வதேச விளையாட்டு தினத்தை முன்னிட்டு விளையாட்டு வீரர்களுடன் சென்னை, அண்ணா பிள்ளை தெருவில் உள்ள ராஜஸ்தான் மைதானத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர் பாபு கலந்து கொண்டு கலந்துரையாடினார். இக்கலந்துரையாடல் கூட்டத்தில் பகுதிகழகச் செயலாளர் எஸ்.முரளி, இரா.நரேந்திரன், பி.ஸ்ரீராமுலு, எம்.விஜயகுமார், பா.ஜெகதீஷ், ஜி. ராமமூர்த்தி, த.கதிரவன் (எ) ராஜா, லண்டன் முருகன் மற்றும் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.

பெருங்களத்தூர் தெற்குப் பகுதியில் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ.,

கழக வேட்பாளர் மருத்துவர் ஆர்.எஸ்.கிருத்திகாதேவியை ஆதரித்து தீவிரவாக்கு சேகரிப்பு!

பகுதிக் கழகச் செயலாளர் எஸ். சேகர் அறிக்கை!

தாம்பரம், ஏப்.13- தாம்பரம் மாநகரம், பெருங்களத்தூர் தெற்கு பகு திக்கு உட்பட்ட 61வது, வட் டத்தில் உள்ள வேல் நகரில் இருந்து, 59, 58, 57, 55, 56, ஆகிய வட்டங்களில்,மதச் சார்பற்ற முற்போக்கு கூட் டணி,சார்பில் போட்டியி டும் தாம்பரம் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட் பாளர் டாக்டர் ஆர்.எஸ். கிருத்திகா தேவி,அவர் கள்,இன்று (13.04.2026.திங் கட்கிழமை) மாலை 4.00 மணி அளவில், மேற் சொன்ன,அனைத்து, வார்டு களிலும்,முக்கிய வீதிகளில் வாகன பிரச்சாரத்தில் ஊர்வ லமாக சென்று வாக்குகள் சேகரிக்கிறார், கடைசியாக அம்பேத்கர் சிலை அருகில், பிரச்சாரம் நிறைவு பெரும்,

மேற்படி நிகழ்ச்சிகளில் தாம்பரம் மாநகர கழக செய லாளர் எஸ்.ஆர்.ராஜா எம் எல்ஏ மாநகர மேயர், க.வசந் தகுமாரி, துணை மேயர், கோ.காமராஜ்,மண்டல குழு தலைவர், டி.காமராஜ், தொகுதி பார்வையாளர்கள், என்.மருதுகணேஷ், பரிதிஇ ளம்சுருதி,மற்றும் மதச்சார் பற்ற முற்போக்கு கூட்டணி களின், நிர்வாகிகள், தலை மைச் செயற்குழு, பொதுக் குழு, உறுப்பினர்கள்,பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், நிர் வாகிகள் இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி உள்ளிட்ட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், கழக உடன்பிறப்புகள், பொதுமக் கள், இருசக்கர வாகனங்க ளில் கழகக் கொடிகள் உட் பட கூட்டணிக் கட்சிகள் கொடிகளுடன் அணிவ குத்து, தவறாமல் கலந்து கொண்டு நிகழ்ச்சினை சிறப் பிக்க வேண்டுமாய், பெருங் களத்தூர் தெற்கு பகுதிக் கழ கச் செயலாளர், எஸ். சேகர் எம்.சி. தனது அறிக்கையில், கேட்டுக் கொண்டுள்ளார்.

சைதாப்பேட்டை மடுவின்கரையில் கழக வேட்பாளர்

மா.சுப்பிரமணியனை ஆதரித்து பிரச்சாரம்!

து.ராஜா–சே.மெ.மதிவதனி உரையாற்றுகின்றனர்!

சென்னை,ஏப்.13- மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தி.மு.கழக வேட்பாளர் திரு. மா.சுப்பிரமணியனை ஆத ரித்து இன்று (13-4-2026) திங்கள் கிழமை மாலை 5 மணி அளவில் மடுவின்கரை பிள்ளையார் கோயில் தெரு வில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச்செயலாளர் து.ராஜா மற்றும் திராவிடர் கழக துணைப்பொதுச்செயலாளர் சே.மெ.மதிவதனி ஆகி யோர் சிறப்புரையாற்று கின் றனர்.

ஆகவே இந்த தேர்தல் பொதுக்கூட்டத்தில் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட் டணிக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், தொண்டர்கள், தி.மு.கழகத்தைச் சேர்ந்த நிர் வாகிகள், தொண்டர்கள், தோழர்கள் திரளாக பங்கேற் றுச் சிறப்பித்திடுமாறு கேட் டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கழக வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து

மயிலை மேற்குப் பகுதி சார்பில் 123 'அ' வட்டத்தில் வாக்கு சேகரிப்பு!

பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. அறிக்கை!

சென்னை, ஏப். 13- மதச்சார்பற்ற முற் போக்கு கூட்டணியின் மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி 123 அ வட் டத்தில் தீவிர வாக்கு சேக ரிப்பு இன்று (13.4.2026) திங்கட்கிழமை காலை 7:00 மணியளவில் நடை பெறுகிறது.

மயிலை மேற்கு பகு தியை சார்ந்த மாநில, மாவட்ட, பகுதி, நிர்வாகி கள் வட்டக் கழக செயலா ளர்கள் மாவட்ட பிரதிநிதி கள் பகுதி பிரதிநிதிகள், வட்ட நிர்வாகிகள் அணிக ளின் மாநில, மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பா ளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் BLA 2, BLC ,BDO, மற்றும் முன் னோடிகள் கழகத்தோழர் கள் அனைவரும் தவறா மல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வாக்கு சேகரிக்கும் இடங்கள்:

காலை - 7.00 மணியள வில் குருபுரம் தேவகி டீ ஸ்டால் அருகில் ஆரம்பம், படவட்டான் தெரு, நைநான் தெரு, முதல் மெயின் ரோடு ஆர் ஏ புரம், விசாலாட்சி நகர், சுப்புராயன் சாலை, விசா லாட்சி தோட்டம் அனைத்து தெருகளும், மதனகோபால் தெரு, கன்னி கோயில் மேடு, கன்னி கோயில் பள்ளம்.

மாலை 4.00 மணியள வில் ஆபிரமபுரம் ஸ்கூபி ஆரம்பம், கானல் பங்க் சாலை, கபாலி தோட்டம், பல்லக்கு மாநகர், மாத ராவ் கார்டன் நிறைவு பெறுகிறது.

இவ்வாறு மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம்.கி.மதி எம்.சி. அறிவித்துள்ளார்.

மயிலை கிழக்குப் பகுதி தி.மு.க. மாணவர் அணி சார்பில்

கழக வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து 124வது வட்டத்தில் வாக்கு சேகரிப்பு!

சென்னை, ஏப்,13- மதச்சார்பற்ற முற் போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆத ரித்து உதயசூரியனுக்கு வாக்கு கேட்டு மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி மற்றும் 124வது வட்டச் செயலாளர் ஏ.தாஸ் மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் எஸ்.சரவ ணன் அவர்களின் அறிவு றுத்தலின்படி மயிலை கிழக்கு பகுதி தி.மு.க மாணவர் அணி சார்பில் இன்று (13.4.2026) 124 வது வட்டத்தில் மாலை 5மணியளவில் வீடு வீடாக சென்று பிரச்சாரம் நடை பெறுகிறது.

இதில் பி.ஆர்.மோகன் ராஜ், ரா.ராக்கேஷ், மு.திலிப்குமார், கோ.மணி கண்டன், ஏ.விஷால், ச.பிரேம்குமார், ரா.மணி கண்டன், சா. சுவாதிநாத், ஆகியோர் வரவேற்கின்ற னர்.

எனவே மயிலை கிழக்கு பகுதி மாணவர் அணி மற் றும் கழக செயல் வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறோம்.

இவ்வாறு மயிலை கிழக்கு பகுதி மாணவரணி அமைப்பாளர் ஏ.கோகுல கிருஷ்ணன் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

திருவொற்றியூர் கிழக்கு பகுதி 8வது வட்டத்தில் வேட்பாளர் எல்.சுந்தர்ராஜனை ஆதரித்து பொதுமக்களிடம் தலைமை பொது குழு உறுப்பினர் இரா .முருகேசன் வாக்கு சேகரித்தார். உடன் தோழமைக் கட்சிகளான இந்திய தேசிய காங்கிரஸ் டி.பி.இ. சத்தியமூர்த்திவிடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்ட் கட்சி சேர்ந்த அன்பு, பாக்கியம் மனிதநேய மக்கள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மற்றும் கூட்டணி கட்சி தோழர்கள் திரளாக பங்கு பெற்றனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் ஆ. கிருஷ்ணசாமியை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனைப்படி பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் பாரிவாக்கம் ஊராட்சியில் ஒன்றிய செயலாளர் பூவை ப.ச.கமலேஷ் விதி வீதியாக சென்று வாக்கு சேகரித்தார் உடன் திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

சட்டமன்றத் தேர்தல் 2026

தமிழ்நாடு முழுவதும் பூத் சிலிப் விநியோகம் தொடங்கியது!

சென்னை,ஏப்.13- தமிழ்நாடு முழுவதும் வாக்காளர்களுக்கு பூத் சிலிப் விநியோகப் பணிகள் இன்று தொடங்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் அடுத்த ஐந்து நாட்களில் நிறைவு பெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரி வித்துள்ளது.

தமிழகத்தில் மொத்த முள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளில் 4,023 வேட் பாளர்கள் போட்டியிடுகின் றனர். இந்நிலையில், வாக்கா ளர்கள் தங்கள் வாக்குச்சாவடிகளை எளி தாக அடையாளம் காணும் வகையில் 'பூத் சிலிப்' வழங் கப்படும். அதன்படி தமிழ் நாடு முழுவதும் உள்ள 5.73 கோடி வாக்காளர்களுக்கும் நேரடியாக வீடு தேடி சென்று 'பூத் சிலிப்' வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது. இந்தப் பணியில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், உள்ளூராட்சி பணியாளர் கள் உள்ளிட்டோர் ஈடுபடுத் தப்பட்டுள்ளனர். ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் சுமார் 1,200 வாக்காளர்கள் இருப் பதாக கணக்கிடப்பட்டுள் ளது. இதன் அடிப்படை யில், ஒவ்வொரு மையத்திற்கும் தனிப்பட்ட பொறுப்பாளர்கள் நியமிக் கப்பட்டு, பூத் சிலிப் விநி யோகம் நடைபெற தேர்தல் ஆணையம் நடவடிக்கை எ டு த் து ள் ள து .

தமிழகம் முழுவதும் 75,000 முதல் 97,000 வரையி லான வாக்குச்சாவடி மையங் கள் அமைக்கப்பட உள்ளது. ஒவ்வொரு வாக்குச்சாவடி மையத்திற்கும் ஒரு 'பூத் லெவல் அதிகாரி' (பிஎல்ஓ) நியமிக்கப்பட்டு, அவர்கள் வீடு தோறும் சென்று வாக் காளர்களுக்கு நேரடியாக சிலிப்புகளை வழங்குகின்ற னர். மேலும் வாக்குச்சாவடி மையங்களில் பணியாற்றக் கூடிய வகையில் பி எ ல் ஓ க் க ளு க் கு முன்கூட்டியே பயிற்சிகளும் அ ளி க் க ப் ப ட் டு ள் ள து .

மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி தி.மு.கழக வேட்பாளர்

மா.சுப்பிரமணியன் வீதி, வீதியாக தேர்தல் பிரச்சாரம்!

பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் அறிக்கை!

சென்னை,ஏப்.13- மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் அவர் கள் நாளை (14-4-2026) செவ்வாய்க்கிழமை 169 அ வட்டத்தில் காலை 7 மணி முதல் வீதி, வீதியாக சென்று பொதுமக்களிடம் வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவ ரம் வருமாறு:-

169 அ வட்டம்

காலை 7 மணி முதல் 12 மணி வரை

காலை 7 மணிக்கு கிழக்கு ஜோன்ஸ் சாலை, சின் னையா தோட்டம் 1, 2 தெருக்கள், மசூதி தோட்டம் 1,2 தெருக்கள், சுடியம்மன் பேட்டை, காவேரி நகர், அம்மா உண வகம் வழியாக, ரயில்வே பார்டர் 1வது தெரு, ரயில்வே பார்டர் 2வது தெரு, பாரதிதாசன் மெயின்ரோடு, பாரதிதாசன் 1 முதல் 3 தெருக்கள், பாரதி தாசன் கிழக்கு தெரு, சாஸ் திரி மெயின்ரோடு, சாஸ்திரி 1 முதல் 3 தெருக்கள், 70 அடி சாலை அரங்கநாதன் சுரங் கப்பாதை சர்வீஸ் சாலை வழியாக அப்பாவு நகர் ஆர்ச், இந்திராகாந்தி தெரு, காவேரி நகர் 1வது தெரு, ரயில்வே பார்டர் 2வது தெரு, கஸ்தூரிபாய் தெரு, பாரதி தெரு, அண்ணா 1 மற் றும் 2 தெருக்கள், மருத்துவ மனை சாலை, காந்திபுரம் 1 முதல் 3 தெருக்கள், மேற்கு கி.ஐ.டி நகர் நந்தி லூரக் 12.30 மணி வரை வாக்குச் சேக ரிப்பு நிகழ்ச்சி நடைபெறும்.

மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரை

மாடல் அட்மண்ட் சாலை, பிள்ளையார் கோயில் தெரு, மசூதி காம்ப வுண்ட், மாடல் அட்மண்ட சாலை விரிவு, ராஜாபாளை யத்தம்மன் கோயில் முடிவு.

எனவே மேற்கண்ட வாக் குச் சேகரிப்பு நிகழ்வில் சைதாப்பேட்டை சட்டமன் றத் தொகுதிக்குட்பட்ட தி.மு.கழக நிர்வாகிகள், கூட் டணிக்கட்சிகளின் நிர்வாகி கள், தொண்டர்கள், தோழர் கள் பங்கேற்றுச் சிறப்பித்திடு மாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி சட்டமன்ற கழக வேட்பாளர் டி.ஜே.கோவிந்தராஜனை ஆதரித்து, பூண்டி கிழக்கு ஒன்றியத்தில் மாவட்ட செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் திராவிடமாடல் அரசின் திட்டங்களை எடுத்துக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டார். உடன் ஒன்றியச் செயலாளர் டி.கே.சந்திரசேகர் உள்பட திமுக நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

சென்னை மேற்கு மாவட்டம் அண்ணா நகர் தெற்கு பகுதி 107 (அ) வட்டத்தில் அண்ணா நகர் வேட்பாளர் நே.சிற்றரசுக்கு வட்டக் கழக செயலாளர் வி.எம்.சிவா தலைமையில் மகளிர் அணி மாவட்ட அமைப்பாளர் திருமதி யோகேஸ்வரி சுந்தரேசன் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட துணை அமைப்பாளர்கள் பி எல் ஏ 2, அனைவரும் கலந்து கொண்டு வீடு வீடாக, வி.ஓ.சி. காலனி, அமைந்தகரை கன்னையா தெரு உள்ளிட்ட இடங்களில் வாக்கு சேகரித்தனர்.